**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.22/2026 |
| Deposition of witness | | PW-2/LW-8 |
| Name | | திரு. இளங்கோ |
| Father’s/Husband Name | | திரு.முத்துப்பாண்டி |
| Village | | அச்சன்புதுர் |
| Taluk | | கடையநல்லூர், தென்காசி |
| Age | | 27 /2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23th day of Feburary 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுக்கூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ராஜகோபால் SSI, அவருடன் சேர்ந்து பணிபுரிந்த காலத்தில் கையெழுத்து மற்றும் எழுது நடை நன்கு பரீட்சையம் என்பதால் வீண் காலதாமதம் மற்றும் பொருட்செலவை கருத்தில் கொண்டு அவர்களுக்காக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.11.2025 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜகோபால் நிலைய பொறுப்பில் இருந்தபோது பட்டுக்கோட்டை அரசு மருத்தவமனையில் தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த கண்ணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று மனு எண் 716/25 பதிவு செய்து விசாரித்து மதுக்கூர் காவல் நிலைய குற்ற எண்.412/2025, ச/பி. 296(b),115(2),351(2)BNS கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அவர் பெற்ற புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 11.11.2025 காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சத்தியபிரியன், காளிதாஸ்

ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அசாஆ4** மற்றும் மாதிரிவரைப்படம் **அசாஆ5** ஆகும். பின்பு பார்வை மகசர் சாட்சிகள் சத்தியபிரியன், காளிதாஸ் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ சாட்சிகள் கண்ணன், கிருஷ்ணமூர்த்தி, அசோக்குமார்,மற்றும் சுமதி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் கூறினார்கள். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மேலும், காயம்பட்ட கண்ணனுக்கு சிகிச்சை அளித்த பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் ராகேஷ் ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், காயம்பட்ட நபரான வாதி கண்ணன் சிகிச்சையிலிருந்து சொல்லாமல் சென்றதால் மருத்துவர் patient absconded from ward, final opinion nature of wound cannot be given என்று குறிப்பிட்டுள்ளார். விபத்து பதிவேடு **அ.சாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதியாக 18.11.2025 வழக்கின் விசாரணை முடித்து எதிரிகளின் மீது ச/பி. 296(b),115(2),351(2)BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்வில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.